පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය -394

ආයතනයේ නම -ශ්‍රී ලංකා සිවිල් ගුවන් සේවා අධිකාරිය

පාර්ලිමේන්තුවේ පොදු ව්‍යාපාර පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 120 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் -394

நிறுவனத்தின் பெயர் - சிவில் விமானப் போக்குவரத்து சேவை அதிகாரசபை

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 120(4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 394

Name of the institution: Civil Aviation Authority of Sri Lanka

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Enterprises in terms of Standing Order No. 120(4)

ශ්‍රී ලංකා සිවිල් ගුවන් සේවා අධිකාරිය

சிவில் விமானப் போக்குவரத்து சேவை அதிகாரசபை

Civil Aviation Authority of Sri Lanka

පොදු ව්‍යාපාර පිළිබඳ කාරක සභාවේ 2025 අගෝස්තු මස 20 වැනි දින බදාදා ප.ව.1.30ට කාරක සභා කාමර අංක 05හි පැවැත්වූ 19 වැනි රැස්වීමේ කාර්ය සටහන් සම්බන්ධ වාර්ථාව

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் . : 394

நிறுவனத்தின் பெயர் : இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

பரிந்துரை : நிலையியற் கட்டளை இலக்கம் 120(4) இற்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ள அளவீடுகள் / அவதானிப்புகள், கருத்திற் கொள்ளப்பட்ட மாற்று செயற்பாடுகள் / தற்போதைய நிலமைகள் தொடர்பில் குறிப்பிட உத்தேசிக்கப்பட்டுள்ள பதில்கள்

செயற்குழுவின் 2025 ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 1.30 இற்கு செயற்குழு அறை இலக்கம் 05 இல்இடம்பெற்ற 19 ஆவது பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டத்தின் அறிக்கையின் தற்போதைய செயல் நிலை.

தொடர் இலக்கம்	செயற்குழுவில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள்	செயற்குழுவின் பரிந்துரை	நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்
01	சிவில் விமானப் போக்குவரத்து சேவை அதிகார சபையின் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தியுடன் முன்னெடுத்துச் செல்வதற்காக 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அடையாளம் கண்டு மற்றும் அதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் கணக்காய்வாளர் அறிக்கையின் பிரதியுடன்	சிவில் விமானப் போக்குவரத்து சேவை அதிகார சபையின் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தியுடன் முன்னெடுத்துச் செல்வதற்காக 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அடையாளம் கண்டு மற்றும் அதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் கணக்காய்வாளர் அறிக்கையின் பிரதியுடன் செயற்குழுவிற்கு (COPE) சமர்பித்தல்.	2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமான சேவை அதிகார சபையின் சட்டத்திற்கு மற்றும் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவை சட்டத்திற்கு, அடையாளம் காணப்பட்ட திருத்தங்களை உள்ளடக்குவதற்காக கட்டம் 2 இன் கீழ் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் தற்போதைய முன்னேற்றங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது. **Phase 1** – கட்டம் 1 – 2024/04/25 திகதிய பெற்றுக் கொண்ட அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அமைய மேற்கூறப்பட்ட இரண்டு சட்டங்களுக்காக அடையாளம் காணப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கி திருத்தப்பட்ட சட்ட மூலத்தினை தயாரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு 2024/05/17 திகதி அனுப்பட்டது. 2024/11/07 மற்றும் 2024/11/29 ஆம் திகதிய கடிதம் மூலம் சட்ட வரைஞரினால் புதிய அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக தேவையான அமைச்சரவைப் பத்தரம் வரைவு 2024.11.28 ஆம் திகதிய அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டது. அதற்குப் பின்னர் கௌரவ பிரதி அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய உரிய சட்ட மூலத்தினை தயாரிப்பதற்காக உள்ளக விமானப் போக்குவரத்து செயற்பாட்டாளர்கள் (Domestic Air Operators)

	செயற்குழுவிற்கு (COPE) சமர்பித்தல்.		மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விமான பயிற்சி நிறுவகங்களினால் (Approved Training Organizations) திருத்தங்கள் தொடர்பிலான யோசனைகள் 2025.03.10 மற்றும் 2025.03.11 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் பெற்றுக் கொள்வதற்கு சிவில் விமான போக்குவரத்து சேவை அதிகார சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையினால் 2025.07.31 ஆம் திகதிய புதிய அமைச்சரவை அங்கீகாரத்தினை துரிதகதியில் பெற்றுக் கொள்ளுமாறு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. பின்னர் 2025.09.30 ஆம் திகதிய கடிதம் மூலம் அமைச்சின் ஆலோசனைக்கு அமைய 2024.11.28 ஆம் திகதி அனுப்பப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தினை திருத்தியமைத்து அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அமைச்சின் ஆலோசனைக்கு அமைச்சரவைப் பத்திரத்தினை மீண்டும் திருத்தியமைத்து 2025 டிசம்பர் 3 மற்றும் 23 ஆகிய தினங்களில் அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. பின்னர் அமைச்சின் செயலளரின் ஆலோசனைக்கு அமைய அதன் சட்டத்திற்காக யோசனை தெரிவிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்கள் கௌரவ அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளரின் பங்கேற்புடன் 2026.01.13 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இதற்க அமைய மீண்டும் திருத்த யோசனைகளுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை பத்திரத்துடன் அமைச்சிற்கு 2026.02.09 ஆம் திகதி அமைச்சிற்கு அனுப்பியதுடன் அவ் அமைச்சரவை பத்திரம் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்புவதற்கு தேவையான செயற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

			(2024/04/25 ஆம் திகதிய உரிய சட்ட திருத்தத்திற்காக பெற்றுக் கொண்ட அமைச்சரவை அங்கீகாரம் இணைப்பு 1 – 1 என்ற அடிப்படையிலும், சட்ட வரைஞருக்கு திருத்தப்பட்ட சட்ட வரைவினை தயாரிப்பதற்காக அனுப்பப்பட்ட கடிதம் இணைப்பு 1 - II என்ற அடிப்படையிலும், சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் 2024/11/07 மற்றும் 2024/11/29 ஆம் திகதிய கடித இணைப்பு 1 - III என்ற அடிப்படையிலும் அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சிற்கு அனுப்பபட்ட 2024/11/28 திகதிய கடிதம் இணைப்பு 1 – IV என்ற அடிப்படையிலும், உள்ளக விமானப் போக்குவரத்து செயற்பாட்டாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விமான பயிற்சி நிறுவனங்களினால் சமர்பிக்கப்பட்ட கடித இணைப்பு 1 -V என்ற அடிப்படையிலும், அமைச்சிற்கு அனுப்பட்ட நினைவூட்டல் கடிதத்தின் இணைப்பு 1 – VI ஏன்ற அடிப்படையிலும், அமைச்சின் ஆலோசனைக்கு அமைய 2025/09/30 ஆம் திகதி அனுப்பப்பட்ட திருத்தப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் இணைப்பு 1 – VII என்ற அடிப்படையிலும் சமர்பிக்கப்பட்டுள்ளது.) **Phase 1 – கட்டம் 2** – 2025/07/21 திகதி பெற்றுக் கொண்ட அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அமைய மேற்கூறப்பட்ட இரண்டு சட்டங்களுக்காக அடையாளம் காணப்படட திருத்தம் (சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் பாதுகாப்பு கணக்காய்விற்கு உரியதான சட்டத்திற்காக உள்ளடக்கப்பட வேண்டிய திருத்தங்கள்) திருத்த சட்ட மூலத்தினை தயாரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு

			2025/09/01 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளதுடன் சட்ட வரைஞரினால் உரிய திருத்த சட்ட மூலம் தயாரிக்கப்படுகின்றது. (2025/07/21 ஆம் திகதி உரிய சட்டத்தினை திருத்துவதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் இணைப்பு 1 - VIII என்ற அடிப்படையிலும், சட்ட வரைஞருக்கு உரிய திருத்த சட்ட மூலத்தினை தயாரிப்பதற்காக அனுப்பப்பட்ட கடிதம் இணைப்பு 1 - IX என்ற அடிப்படையிலும் சமர்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சட்ட வரைஞர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் 2025/09/25 ஆம் திகதி கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் அது குறித்து அனுப்பப்பட்ட கடித இணைப்பு 1 – X ஏன்ற அடிப்படையில் சமர்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சட்ட வரைஞர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் 2025/09/25 ஆம் திகதி கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன் அது தொடர்பில் அனுப்பப்பட்ட கடிதத்தின் இணைப்பு I – X என்று சமர்பிக்கப்பட்டுள்ளது)
02	அரச தொழில் முயற்சியாளர்களுக்காக நிறுவன நிருவாகம் தொடர்பான வழிகாட்டல் ஆலோசனைகளில் 2.4 வாசகத்திற்கு அமைய அதிகார சபையின் பணிப்பாளர்களுக்கு அவர்களின்	அரச தொழில் முயற்சியாளர்களுக்காக நிறுவன நிருவாகம் தொடர்பான வழிகாட்டல் ஆலோசனைகளில் 2.4 வாசகத்திற்கு அமைய அதிகார சபையின் பணிப்பாளர்களுக்கு அவர்களின்	சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களிடமிருந்து உரிய வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களிடம் அவ் வெளிப்பாடு ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. அவ் வெளிப்பாட்டின் பிரதி இணைப்பு 2 - I என்று சமர்பிக்கப்பட்டுள்ளது.

	கடமைகளுக்கு தாக்கம் செலுத்தும் நிதி அல்லது வேறு தொடர்புகள் இல்லை என்பது தொடர்பான வெளிப்பாடுகளை வருடாந்தம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல்.	கடமைகளுக்கு தாக்கம் செலுத்தும் நிதி அல்லது வேறு தொடர்புகள் இல்லை என்பது தொடர்பான வெளிப்பாடுகளை வருடாந்தம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல்.	
03	2025 மார்ச் மாதம் 24 ஆம் திகதிய இலக்கம் PS/SB/Circular/03/2025 ஜனாதிபதி செயலாளரின் சுற்றிக்கைக்கு அமைய நாட்டின் தேசிய கொள்கைக்கு அமைய 05 வருடங்களுக்காக மூலோபாயத் திட்டம் வகுக்கப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையின் 2025 தொடக்கம் 2027 வரை 03 ஆண்டு காலத்திற்காக மாத்திரம் மூலோபாயத் திட்டம் வகுக்கப்பட்டு இருந்தது. மேலும் அவ் ஜனாதிபதி சுற்றிக்கைக்கு அமைய 2025 ஆம் ஆண்டிற்கான	அதிகார சபையின் 2026 - 2030 மூலோபாய திட்டத்தினை தயாரிக்கும் போது இலக்கம் PS/SB/Circular/03/2025 மற்றும் 2025 மார்ச் மாதம் 24 ஆம் திகதிய ஜனாதிபதி செயலாளரின் சுற்றிக்கைக்கு அமைய வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் rolling over முறைக்கு 05 வருடங்களுக்கு தயாரித்தல். இதற்கு அமைவாக வரவு செலவு ஆவணம் மற்றும் கொள்வனவுத் திட்டத்தினை	அரச உரிமை கொண்டுள்ள தொழில் முயற்சிகளுக்காக கம்பனியின் நிருவாகம் தொடர்பான வழிகாட்டல் ஆலோசனையின் (Guidelines on Corporate Governance for State-Owned Enterprises) துணைப்பிரிவு 2.3 (இணைப்பு 3 – 1) இற்கமைய மற்றும் 2025 ஆகஸட் 20 ஆம் திகதி இடம்பெற்ற 19 ஆவது பொது வர்த்தகம் தொடர்பான குழுவின் கூட்டத்தில் வெளியிடப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய, 2025 நான்காவது காலாண்டு இறுதியில் 2026 - 2030 காலப் பகுதியிற்கான ஐந்தாண்டுகால புதிய இணைந்த திட்டத்தினை தயாரிக்கும் செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 2026–2030 காலப் பகுதியிற்கான புதிய ஐந்தாண்டுகால இணைந்த திட்டத்தினை தயாரிக்கும் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்து 2025 டிசம்பர் 15 ஆம் திகதி இடம்பெற்ற 214 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் (CAASL

	செயற்பாட்டுத் திட்டம் வரவு செலவு சுற்றிக்கை மற்றும் பெறுகைத் திட்டம் சமகாலப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. 2025 ஆம் ஆண்டு இறுதியளவில், 2026 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 வரை 5 வருடங்களிற்காக rolling over முறைக்கு இணைந்த திடத்தினை தயாரிப்பதற்கு அதிகார சபையினால் எதிர்பார்க்கப்படுகின்றது.	தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.	பணிப்பாளர் சபையினால், அது உத்தியோகபூர்வ அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டது. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் 2026–2030 இணைந்த திட்டத்தின் மென்பொருள் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அவ் ஐந்து வருடகால இணைந்த திட்டத்தினை தயாரிக்கும் செயற்பாடுகளை பூர்த்தி செய்து முடிவுறுத்தியதன் பின்னர் அது 2025 டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி பொது வர்த்தக செயற்குழு திணைக்களத்திற்கு, அரச கணக்காய்வு அலுவலகத்திற்கு மற்றும் நிரல் அமைச்சிற்கு சமர்பித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ் இணைந்த திட்டம் மேற்கூறப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டதாக உறுதிப்படுத்துவதற்காக தேவையான ஆவணங்களைப் பறிமாறிக் கொள்ளலும் correspondence) இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. அனைத்துத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
4	சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் (ICAO) ஒப்பளவுகளுக்கு அமைவாக சிவில் விமான சேவை அதிகார சபையின் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகள் (SOR) தயாரிப்பது தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துடன் கலந்துரையாடி உரிய ஆட்சோப்பு ஒழுங்கு	1. 2026 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு உள்ள சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் (ICAO) கணக்காய்வினை வெற்றிகரமாக்குவதற்கு அத்தியவசிய சிரேஷ்ட பதவிகளில் வெற்றிடங்களை உடனடியாக நிறப்புவதற்கு	இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதி முறைகள் தொடர்பில் மற்றும் அதற்கு உரியதாக மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் 2025.08.27 ஆம் திகதி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் நீண்ட பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதுடன் அதிகார சபையின் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிமுறைகளை மீளாய்விற்கு உட்படுத்தல், கீழ் குறிப்பிடப்பட்ட மூன்று கட்டங்களின் கீழ் மேற்கொள்வதற்கான காலப்பகுதி வகுக்கப்பட்டுள்ளது. இங்கு தொடர்ந்தும் இது தொடர்பான மீளாய்வுகளை மேற்கொள்ளும் போது சர்வதேச சிவில் விமான

	விதிகள் (SOR) தயாரித்து அதனை முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். உரிய செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பான அறிக்கையினை **ஒரு மாத்திற்குள்** கணக்காய்வாளருக்கு பிரதியுடன் செயற்குழுவிற்கு வழங்குதல்.	தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். 2. நீண்டகாலம் அதிகார சபையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது வெளிநாட்டில் உள்ள இருப்பினும் இலங்கைக்கு மீள வருகைதந்து சேவையாற்றுவதற்கு விருப்பத்துடன் உள்ள நபர்கள் உட்பட தனியார் துறை மற்றும் விமானப் படையில் சேவையாற்றும் சிவில் விமான சேவைத் துறையின் தொழிலாளர்களை கவர்ச்சியற்கு உட்படுத்தும் வேலைத்திட்டங்களை வகுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.	சேவை அமைப்பின் (ICAO) ஒப்பளவுகளுக்கு அமைவாக சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகள் (SOR) வகுத்தலானது கீழ் குறிப்பிடப்பட்ட மூன்று கட்டங்களின் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. **I கட்டம்** - ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு மற்றும் ஊழியர் எண்ணிக்கை தேவைகளை மிளாய்விற்கு உட்படுத்தல். **II கட்டம்** - சம்பளக் கட்டமைப்பு மீளாய்வுகள் **III கட்டம்** - ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகள் மீளாய்வு இதற்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்ட கட்டங்கள் இரண்டு பொறிமுறைகளின் கீழ் தொடர்ந்து அமுல்படுத்துவதற்கு தீர்மாணிக்கப்பட்டது. **01 குறுகிய கால யோசனைத் திட்டங்கள்** குறுகிய கால யோசனைத் திட்டமாக தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளை மீளாய்விற்கு உட்படுத்தி தேவையான திருத்தங்களை உள்ளடக்கி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல். **02 நீண்டகால யோசனைத்திட்டங்கள்** மேற்கூறப்பட்ட மூன்று கட்டங்களின் கீழ் ஆலோசனை ஊழியர்களின் உதவியின் கீழ் நிறுவனத்தின் மீள் கட்டமைப்புக்கள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.
05.1	அரச வர்த்தக திணைக்களத்துடன் கலந்துரையாடி சர்வதேச சிவில் விமான சேவை	சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் (ICAO) ஒப்பளவுகளுக்கு அமைய அதிகார சபையின் சுய நிதி	2002 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் சட்டத்தின் மூலம் இலங்கை சிவில் விமானப்

	அமைப்பின் (ICAO) ஒப்பளவுகளுக்கு அமைவாக அதிகார சபையின் சுய நிதியீட்டிற்காக தேவையான நிதி அளவு நிறுவனத்தில் தேக்கிவைத்திருந்த எஞ்சிய வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் (OSS) வருமானம் திரண்ட நிதியத்தில் வைப்பிலிடுவதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய உரிய செயற்பாடுகள் தொடர்பான விரிவான கற்கையினை மேற்கொண்டு அது தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், உரிய செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பான அறிக்கை **ஒரு மாதத்திற்கு** கணக்காய்வாளருக்கு பிரதியுடன் செயற்குழுவிற்கு வழங்குதல்.	நிறுவனமாக பேனுவதற்காக தேவையான நிதி அளவு நிறுவனத்திற்கு நிறுத்திவைத்துள்ள எஞ்சிய வெளியாட்டு விற்பனை மிகைக் கட்டணம் (OSS) வருமானத்தினை இணைந்த நிதியத்திற்கு வைப்பிலிடுவதற்காக முன்னெடுக்க வேண்டிய உரிய செயற்பாடுகள் தொடர்பாக விரிவான ஆய்வினை மேற்கொண்டு அது தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.	போக்குவரத்து அதிகார சபை தாபிக்கப்பட்டதுடன், அச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் அதிகார சபையின் நிதியம் உருவாக்கப்பட்டது. அக் காலத்தில் (2003 ஆம் ஆண்டு) தொடக்கம் அப் பிரிவின் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றி, அது வரையில் சேகரிக்கப்பட்டு வந்த OSS (PTA) உட்பட அனைத்து வருமான வகைகள் மூலமும் கிடைத்த நிதி சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை நிதியத்தில் வைப்பிலிடப்பட்டது. 2002 ஆம் ஆண்டின் இலக்கம் 34 கொண்ட சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தின் 12 (2) (இ) பிவிற்கு அமைய வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் அதிகார சபையின் நிதியத்தின் ஒரு பகுதியாக கருதப்பட்டது. தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5.2	அதிகார சபையின் சுய நிதியத்திற்காக தேவையான நிதி அளவு நிறுவனத்தில் நிறுத்திவைக்கும் வகையில் 2008 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி இலக்கம் 1550/7 கொண்ட இலங்கை ஜனநாயக சோலிச குடியரசின் (அதி விஷேட) வர்த்தமானி அறிவித்தலில் 07 மற்றும் 08 ஆகிய பிரிவுகளிற்கு உரியதாக கட்டளையினை மாற்றியமைப்பது தொடர்பாக அரச வர்த்தக திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்மானத்தினை எட்டுதல்.	அதிகார சபையின் சுய நிதியிற்காக தேவையான நிதி அளவு நிறுவனத்திற்கு நிலைப்படுத்தும் வகையில் 2008 மே மாதம் 22 ஆம் திகதிய இலக்கம் 1550/7 கொண்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் (அதி விஷேட) வர்த்தமானி அறிவித்தலில் 07 மற்றும் 08 பிரிவுகளுக்கு உரியதான கட்டளையினை மாற்றியமைப்பது தொடர்பாக அரச வர்த்தக திணைக்களத்துடன் கலந்துரையாடலை மேற்கொண்டு தீர்மானத்தினை எடுத்தல்.	2024 ஆம் ஆண்டு பெப்பரவரி 19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய ஒரு மாதத்திற்கு 90 மில்லியன் (ஒரு வருடத்திற்கு 1080 மில்லியன்) நிறுத்திவைத்து எஞ்சியது ஒருங்கிணைந்த நிதியத்தில் வைப்பிலிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய மாதம் ஒன்றிற்கு 90 மில்லியன் (ஒரு வருடத்திற்கு 1080 மில்லியன்) நிறுத்திவைத்து எஞ்சியத மாதாந்தம் ஒருங்கிணைத்த நிதியத்தில் வைப்பிலிடப்படுகின்றுத. வெளிநாட்டு விற்பனை மிகைக்கட்டனத்தினை மேற்பார்வை செய்யப்படுவதற்காக, 2008 ஆம் ஆண்டின் இலக்கம் 01 கொண்ட விமானப் போக்குவரத்து (பயணிகள்) கட்டண ஒழுங்குக் கோவைகளின் 08 ஆவது ஒழுங்குக் கோவைக்கு அமைவாகும். இவ் ஒழுங்குக் கோவை மேற்கூறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய மாற்றியமைப்பதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஏற்கனவே ஆது தொடர்பில் அரச நிதிக் கொள்கை திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டது. அக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய மாதாந்தம் 90 மில்லியன் அல்லாத மொத்த OSS வருமானத்தில் % பெற்றுக் கொள்வதற்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். இதற்கு அமைய அதற்காக தேவையான பகுப்பாய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
5.3	நிறுவனத்திற்கு உரிய மொத்த சொத்துக்கள் மற்றும் வைப்புக்கள் தொடர்பான	நிறுவனத்திற்கு உரிய மொத்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான வெளிப்பாட்டினைத் தயாரித்தல்.	CAASL இனால் அனைத்து நிதி ஆண்டில் இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய நிதி வெளிப்பாடுகள் தயாரிக்கப்படுகின்றன. 2025 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியிற்காக நிதி வெளிப்பாடுகளை

	வெளிப்பாட்டினை தயாரித்தல்.		தயாரித்து தேசிய கணக்காய்வு அலவலகத்திற்கு கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டுள்ளது. **ஏற்கனவே தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் 2025 டிசம்பர் 31 ஆம் திகதியிற்காக நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.**
5.4	2023 நவம்பர் மாதம் 28 ஆம் திகதிய இலக்கம் 23/1937/628/094 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தனை மீள கருத்திற் கொண்டு அதிகார சபையின் சுய நிதியிற்காக தேவையான நிதி அளவு தொடர்பில் தீர்மானம் எடுத்தல்.	2023 நவம்பர் மாதம் 28 ஆம் திகதிய இலக்கம் 23/1937/628/094 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தனை மீள கருத்திற் கொண்டு அதிகார சபையின் சுய நிதியிற்காக தேவையான நிதி அளவு தொடர்பில் தீர்மானம் எடுத்தல்.	இதற்காக மேற்கூறப்பட்ட 5.II இல் பதில் உரியதாகும். .
6.	கூட்டிணைந்த புறப்படுகை வரி மேற்பார்வை சேவைகள் மூலம் கிடைக்கும் வருமானம், வட்டி வருமானம் மற்றும் ஏனைய செயற்பாடு அல்லாத வருமானம் உட்பட சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு கிடைக்கும் ஏனைய வருமானங்கள் தொடர்பாக விரிவான கற்கையினை மேற்கொண்டு அது தொடர்பான	கூட்டிணைந்த புறப்படுகை மேற்பார்வை சேவைகள் மூலம் கிடைக்கும் வருமானம், வட்டி வருமானம் மற்றும் ஏனைய செயற்பாடு அல்லாத வருமானம் உட்பட சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு கிடைக்கும் ஏனைய வருமானங்கள் தொடர்பாக விரிவான கற்கையினை மேற்கொண்டு அது தொடர்பான பிரச்சினையினை	புறப்படுகை வரியினை சேகரிப்பது தொடர்பில் காணப்படும் பிரதான பிரச்சினையாக அமைவது ஒரு சில விமானக் கம்னிகளினால் புறப்படுகை வரி செலுத்தப்படாமையாகும். புறப்படுகை வரி செலுத்தப்படும் 23 விமானக் கம்பனிகளில் கொடுப்பனவினை தவறவிட்டு இருப்பது 06 விமானக் கம்பனிகள் மாத்திரமாகும். அது 2022 ஆண்டு தொடக்கமாகும், புறப்படுகை வரியினை அறவிடுவதற்கு அதிகார சபையினால் நிருவாக அடிப்படையில் முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்ட போதிலும் 06 விமானக் கம்பனிகளிடமிருந்த அறவிட வேண்டிய நிதியினை அறிவிட முடியாத நிலமை ஏற்பட்டது. இதனால் அது தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்ட வழிமுறைகளை அறிந்து

	பிரச்சினையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். **ஒரு மாத்திற்குள்** உரிய செயற்பாட்டின் முன்னேற்றங்கள் தொடர்பான அறிக்கையினை கணக்காய்வாளருக்கு பிரதியுடன் செயற்குழுவிற்கு வழங்குதல்.	தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.	கொள்வதற்காக அதிகார சபைக்கு காணப்படும் அதிகாரத்தினை உறுதிப்படுத்துவதற்காக சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டமா அதிபரிடம் ஆலோசனைகள் பெற்றுக் கொண்டுள்ளது.. சட்டமா அதிபரினால் சிவில் விமான சேவை அதிகார சபை சட்டத்திற்கு அது தொடாபிலான ஏற்பாடுகள் இல்லை என்று அறிவிக்கப்பட்டது. மேலும் 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கம் கொண்ட நிதி சட்டத்திற்கும் அது தொடர்பிலான ஏற்பாடுகள் இல்லை என்று அறிவிக்கப்பட்டது. அச் சட்டம் 2003 ஆம் ஆண்டில் திருத்தப்படும் சந்தாப்பத்தில் காணப்பட்ட ஏற்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. அதற்கு அமைய சிவில் விமான சேவை அதிகார சபையினால் பொதுத் திறைசேரியுடன் மீண்டும் நிதி சட்டத்திற்கு அமைய ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும் கொடுப்பனவினை செலுத்தாது தவறிவிட்டுள்ள பிட்ஸ் ஏவியேசன் கம்பனி நிலுவை நிதியனைத் தீர்க்கும் முறை தொடர்பில் யோசனைகளை முன்வைத்து கடிதம் அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இணைக்கப்பட்டுள்ளது 6 – 1) ஸ்ரீ லங்கன் விமான சேவை தொடர்பில் கொள்கை அடிப்படையிலான தீர்மானத்தினை எடுப்பதற்காக நாம் திறைசேரி செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளோம். (இணைக்கப்பட்டுள்ளது 6 – 2) விமானப் போக்குவரத்து வரி செலுத்துவதனை தவறவிட்டுள்ள அனைத்து விமானக் கம்பனிகளுக்கு நாம் இறுதி நினைவூட்டல்களை அனுப்பியுள்ளோம். (இணைக்கப்பட்டுள்ளது 6 – 3) **புறப்படுகை வரி கொடுப்பனவு தவறவிடப்பட்டுள்ள விமானக் கம்பனியிற்காக சட்ட நடவடிக்கை**

			எடுப்பதற்கு தேவையான ஒதுக்கீடுகளை தீர்மானிப்பது தொடர்பில் நிதி அமைச்சுடனான இணைப்புடன் நிரல் அமைச்சின் ஆலோசனைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. (2025.11.24 ஆம் திகதி கடிதம் இணைக்கப்பட்டுள்ளது) (இணைப்பு 6-4) **மேலும் அந் நிதியினை அறவிடுவதற்கு தேவையான ஒதுக்கீடுகளை உள்ளடக்கி 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதி சட்டத்தினை திருத்துவதற்கு அவசியமான வரைவு 2025 ஆகஸ்ட் 25 ஆம் திகதி பொதுத்திறைசேரியின் நிதிக் கொள்கைத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.** **கண்காணிப்பு வருமானம்** கண்காணிப்பு ஒழுங்குமுறை வருமானத்தினை அதிகரிப்பதற்காக கண்காணிப்பு ஒழுங்குமுறைக் கட்டணம் (Fees and charges) அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது 2025 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி CAASL இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரை மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்காக சிங்கள மற்றும் தமிழ் பெயர்ப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2026 ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. **திருத்தப்பட்ட கண்காணிப்புக் கட்டணத்தினை வர்த்தமானியில் வெளியிடுவதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு நிரல் அமைச்சினால் 2026.05.08 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. இது ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (2025.05.08 ஆம் திகதிய கடிதம் இணைக்கப்பட்டுள்ளது.) (இணைப்பு 6 – 5)** **அதிகார சபைக்குரிய காணிகளின் பொறுப்பு விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) (தனியார்) கம்பனி (AASL) இற்கு பொறுப்பளிப்பதற்காக 2026 ஜனவரி 29 ஆம் திகதிய விஷேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2473/17 வெளயிடப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே சிவில் விமான சேவை அதிகார சபையின் கீழ் பதிவு செய்யும்**

			செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் உரிய கட்டணத்தினை அறவிடுவதற்காக AASL உடன் உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய மட்டக்களப்பு விமான நிலையத்திற்காக தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை ஏற்கனவே AASL இற்கு அனுப்பப்பட்டுள்ளது. **ஏனைய வருமானம்** அதிகார சபைக்குரிய காணிகள் மூலம் வருமானத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக சட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது இதற்காக ஒழுங்குக் கோவைகள் விதிக்கப்பட்டுள்ளன. 2025 பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி இலக்கம் 2422/38 மூலம் சிவில் விமான சேவை செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் காணியிற்காக பெயரளவுக் கட்டணம் (Nominal fees) அறவிடுவதற்கான ஒழுங்குவிதிகள் வகுக்கப்படடுள்ளதுடன் 2025 பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2422/39 இன் கீழ் "சிவில் விமான சேவை (விமான சேவை வசதிகள் மற்றும் அதற்கு உரிய காணியினை வழங்குவதற்கான கட்டணத்தினை அறவிடுதல்) ஒழுங்குக் கோவை இலக்கம் 02 – 2025" என்ற பெயரில் விமான சேவை வசதிகள் மற்றும் உரிய காணி தொடர்பான கட்டணங்களை அறவிடுவதற்காக சட்டரீதியிலான கோட்பாடு வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய இக் காணி சிவில் விமான சேவை விவகாரங்களுக்கு பயன்படுத்துவதற்காக ஹெக்டயருக்கு வருடாந்தம் பெயரளவுக் கட்டணமாக ரூபா 50,000 நிதி அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக, உரிய காணிகளின் பொறுப்புக்கள் விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை)

			(தனியார்) கம்பனி (AASL) இற்கு பொறுப்பளிப்பதற்காக 2026 ஜனவரி 29 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2473/17 வெளியிடப்பட்டது. தற்போது சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் பதிவு செய்பவதற்கான செயற்பாடுகள் நிறைவடைந்துள்ள காணிகள் தொடர்பில் உரிய கட்டணத்தினை அறவிடுவதற்காக AASL உடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு 2 மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். AASL மூலம் அறவிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருடாந்த நிதி ரூபா 44 மில்லியன் மாத்திரமாகும்.
7.	சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்குரிய சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் தொடர்பிலான முழுமையான கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அப் புள்ளிவிபரங்களை சமகாலப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.	சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்குரிய சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் தொடர்பிலான முழுமையான கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அப் புள்ளிவிபரங்களை சமகாலப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.	சிவில் விமான சேவைக்குரிய சொத்துக்கள் மற்றும் ஆதங்கள் தொடர்பில் சமகாலப்படுத்தப்பட்ட அறிக்கை ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 7 – 1).
8.	சுற்றுலா பங்களாவை புனரமைக்கும் மொத்த செயற்பாடுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு ஒரு	I. சுற்றுலா பங்களாவை புனரமைக்கும் மொத்த செயற்பாடுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்பித்தல். அத்துடன் முகாமைத்துவம் மற்றும்	வீரவில சுற்றுலா பங்களாவினை புனரமைக்கும் செயற்பாடுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் விசாரணை அறிக்கையை இத்துடன் சமர்பிக்கின்றேன். (இணைப்பு 8 – 1)

	மாத்திற்குள் அதற்கு உரிய அறிக்கை கணக்காய்வாளருக்கு பிரதியுடன் செயற்குழுவிற்கு சமர்பித்தல். முகாமைத்துவ மற்றும் பராமரிப்பு சேவைகள் வழங்கப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள், அந் நிறுவனத்தினால் தோந்தெடுக்கப்பட்டு இருந்த முறைகள், அந் நிறுவனத்திற்கு நிதி செலுத்தப்பட்ட முறைகள் மற்றும் அவ்வாறு செலுத்தப்படட நிதியிற்கு சமமான சேவைகள் இடம்பெற்றிருந்ததா என்பதுடன் தொடர்பான விடயங்கள் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும்.	வழங்கல் நிறுவனம் தொடர்பான தகவல்கள் அந் நிறுவனம் தோர்ந்தெடுத்துள்ள முறைகள், அந் நிறுவனத்திற்கு நிதி செலுத்தப்பட்டுள்ள முறைகள் மற்றும் அவ்வாறு செலுத்தப்பட்ட நிதியிற்கு சேவைகள் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பாக அறிக்கையில் உள்ளடக்குதல். II. கணக்காய்விற்கு உரிய அனைத்து தகவல்களும் கணக்காய்வு மேற்கொள்ளப்படும் சந்தர்பங்களில் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு வழங்குவதற்கு அனைத்து சந்தர்பங்களிலும் நடவடிக்கை எடுத்தல்.	
9.	ஒரு மாத்திற்குள் தங்குமிட விடுதியினை புனரமைக்கும் செயற்பாடுகளின் முழுமையான செயற்பாடுகள் தொடர்பில்	ஒரு மாத்திற்குள் தங்குமிட விடுதியினை புனரமைக்கும் செயற்பாடுகளின் முழுமையான செயற்பாடுகள் தொடர்பில்	தங்குமிட விடுதியினை புணரமைக்கும் செயற்பாடுகளின் முழுமையான பணிகள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உரிய விசாரணை குழு அறிக்கை இத்துடன் சமர்பிக்கின்றேன். (இணைப்பு 9 – 1).

	முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு அறிககை கணக்காய்வாளருக்கு பிரதியுடன் செயற்குழுவிற்கு சமர்பித்தல். புனரமைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்திற்கு நிதி செலுத்தப்படட முறைகள் தொடர்பிலான விடயங்கள் அவ்வாறு செலுத்தப்பட்ட நிதியிற்கு இணைவாக புனரமைப்பு செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பான விடயங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும்.	முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை கணக்காய்வாளருக்கு பிரதியுடன் செயற்குழுவிற்கு சமர்பித்தல். புனரமைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்திற்கு நிதி செயலுத்தப்படட முறைகள் தொடர்பிலான விடயங்கள் அவ்வாறு செலுத்தப்பட்ட நிதியிற்கு இணைவாக புனரமைப்பு செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பான விடயங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும்.	
10	முறையான வரி உடன்படிக்கை இன்றி வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவை (இலங்கை) (தனியார்) கம்பனியிற்கு காணி வழங்குதல். 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கம் கொண்ட சிவில் விமான சேவை அதிகார	குறிப்பிடப்படவில்லை.	2025 பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி இலக்கம் 2422/38 மூலம் சிவில் விமான சேவை விவகாரங்களுக்காக பயன்படுத்தப்படும் காணியிற்காக பெயரளிவலான கட்டணத்தினை அறவிடுவதற்காக ஒழுங்குவிதிகள் வகுக்கப்பட்டுள்ளதுடன், 2025 பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2422/39 இன் கீழ் “சிவில் விமான சேவை (விமானத் தளங்கள் சேவை வசதிகள் மற்றும் அதற்கு

	சட்டத்தினால் மூன்றாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விமான சேவை வசதிகள் மற்றும் காணியினை முறையான வரி உடன்படிக்கை மூலம் அல்லது வாடகை உடணப்டிக்கை இன்றி வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) (தனியார்) கம்பனியிற்கு (AASL) வழங்கப்பட்டு இருந்தது. 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சட்டத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டு இருந்து விமானத் தளங்கள் விமான வசதிகள் மற்றும் இணைந்த காணிகளின் உரிமை சிவில் விமான சேவை செயற்பாட்டாளரான AASL இற்கு வழங்க முடியும்		உரியதான காணியினை வழங்குவதற்கான கட்டணத்தினை அறவிடல்) ஒழுங்குக் கோவை இலக்கம் 02 – 2025” பெயரில் விமானத் தள சேவை வசதிகள் மற்றும் உரிய காணிகள் தொடர்பான கட்டணத்தினை அறவிடுதற்காக சட்டரீதியிலான கோட்பாடு தாபிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய, இக் காணி சிவில் விமான சேவை விவகாரங்களுக்காக பயன்படுத்துவதற்காகும். ஹெக்டயருக்கு வருடாந்தம் பெயரளவிலான கட்டணமாக ரூபா 50,000 நிதியினை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக, உரிய காணிகளின் பொறுப்பு விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) (தனியார்) கம்பனி (AASL) இற்கு பொறுப்பளிப்பதற்காக 2026 ஜனவரி 29 ஆம் திகதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2473/17 வெளியிடப்பட்டுள்ளது. உரிய கட்டணத்தினை முறையாக அறவிடுவதற்காக AASL உடன் அந்தந்த சொத்துக்களுக்காக தனித்தனியாக உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இதன் போது சிவில் விமான சேவை அதிகார சபையின் கீழ் பதிவு செய்வதற்கான செயற்பாடுகளை முடிவுறுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் உடன்படிக்கை கைச்சாத்திடும் செயற்பாடுகள் எதிர்வரும் 2 மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். அதிகார சபைக்குரிய காணிகளின் பொறுப்பு விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) (தனியார்) கம்பனி (AASL) இற்கு பொறுப்பளிப்பதற்காக 2026 ஜனவரி 29 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி இலக்கம் 2473/17 வெளியிடப்பட்டுள்ளதுடன், இது வரையில் சிவில் விமான சேவை அதிகார சபையின் கீழ் பதிவு செய்யும் செயற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ள காணி தொடர்பில் உரிய கட்டணத்தினை

	என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இப் பெறுப்புக்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை என்று செயற்குழுவினால் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது. இவ் வசதிகள் மற்றும் காணிகளின் உரிமை தொடர்பாக AASL கம்பனியின் மூலம் கட்டணத்தினை அறவிடுவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்ந்தும் கலந்துரையாடல் நடாத்தப்பட்டதாகவும் கட்டணத்தினை விதிக்கும் யோசனை இலக்கம் 2122/38 மற்றும் இலக்கம் 2422/39 இன் கீழ் 2025.02.06 ஆம் திகதிய அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டதாகவும் அவ் யோசனை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ள		அறவிடுவதற்காக AASL உடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய மட்டக்களப்பு விமான நிலையத்திற்காக தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை ஏற்கனவே AASL இற்கு அனுபப்பட்டுள்ளது.

	போதிலும் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் கட்டண கிடைப்பனவு உடன்படிக்கையினை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் முகாமைத்துவத்தினால் தெரிவிக்கப்பட்டது.		
11	யாழ்ப்பாண விமான நிலையத்தின் காணியினை அடையாளம் காணும் செயற்பாடுகளை மேற்கொள்ளாமை. 2019 ஒக்டோபர் 17 ஆம் திகதி யாழ்ப்பானம் சர்வதேச விமான நிலையமாக செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. இதற்காக 2019 செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதிய இலக்கம் 2142/74 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மற்றும் அமைச்சரவைத் தீர்மான இலக்கம் CP/19/2008/105/009-1 மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டு இருந்த போதிலும் அதிகார	குறிப்பிடப்படவில்லை.	1950 ஆம் ஆண்டளவில் விமான சேவைத் திணைக்களத்தினால் விமான நிலையத்தினை தாபிக்கும் நோக்குடன் 141.6296 ஹெக்டயர் (349 ஏக்கருக்கு அண்மித்த) அளவு நிலப்பரப்பு பொறுப்பேற்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய சிவில் விமான சேவைத் திணைக்களத்தினால் பெறுப்பேற்கப்பட்ட காணியினை உள்ளடக்கி, 2025 செப்டம்பர் 03 ஆம் திகதிய, இலக்கம் 2452/23 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் சிவில் விமான சேவைத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்ட 349 ஏக்கர் நிலப்பரப்பு அளவு எதிர்வரும் 02 மாதங்களுக்குள் விமான சேவை அதிகார சபையின் பெயருக்கு பதிவதற்காக தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். **சிவில் விமான சேவை திணைக்களத்தினால் சுவீகரிக்கப்பட்ட 349 ஏக்கர் நிலப்பரப்பு சிவில் விமான சேவை அதிகார சபையின் பெயருக்கு பதிவு செய்வதற்காக தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அளவையிலாளர் திணைக்களத்தினால் வரைவு தாயாரிக்கப்பட்டு பின்னர் காணியிற்காக உரிமைச் சான்றிதழை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

	சபையினால் யாழ்ப்பாண விமான நிலையத்தின் 349 ஏக்கர் காணிகளில் எல்லையினை அடையாளம் காணும் செயற்பாடுகளை முடிவுறுத்தி வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடுவதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்படாமை செயற்குழுவினால் கவனம் செலுத்தப்பட்டது. உரிய காணியின் எல்லைகள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்காக தேவையான கட்டளை சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தயாரித்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்பித்ததன் பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேற்பார்வையுடன் கிடைத்த ஆவணம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.		

12	கேப்டவுன் சாசனத்தினை அமுல்படுத்தல். கேப்டவுன் சாசனம் (Cape Town Convention) அமுல்படுத்துவதற்காக தேவையான இணக்க சட்ட மூலம் சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது 2025 மே மாதம் 15 ஆம் திகதி வெளியிடுவதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்டுள்ள திருத்த சட்ட மூலத்திற்காக சட்டமா அதிபரின் தீர்வு கிடைக்க இருப்பதாக அதன் தற்போதைய நிலைமை தொடர்பில் வினவும் போது தெரிவிக்கப்பட்டது.	குறிப்பிடப்படவில்லை.	கேப்டவுன் சாசனம் (Cape Town Convention) அமுல்படுத்துவதற்காக தேவையான இணக்க சட்ட மூலம் சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது 2025 மே மாதம் 15 ஆம் திகதி சட்டமா அதிபரின் தீர்விற்காக அனுப்பப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் தீர்வு 2026 மார்ச் மாதம் 09 ஆம் திகதிய, இலக்கம் B/51/2023 கடிதத்தின் மூலம் சிவில் விமான சேவை அமைச்சின் செயலாளருக்கு கிடைத்துள்ளது. அதற்கு அமைய சட்ட மூலம் மும்மொழிகளிலும் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு சிவில் விமான சேவை அதிகார சபைக்கு அனுப்பப்படவுள்ளது.

அநுர கருணாதிலக (பா.உ.)

துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்.

Anura Karunathilake
Minister of Ports and Civil Aviation
Ministry of Ports and Civil Aviation
No.19, Chaithya Road, Colombo 01.